**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதிமன்றம், தரங்கம்பாடி**
**முன்னிலை – திருமதி.P. கனிமொழி , B.L.,**
மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்
2025 ம் ஆண்டு ஜூலை மாதம் 10 ம் நாள் வியாழக்கிழமை
திருவள்ளுவர் ஆண்டு 2056, ஆனி மாதம் 26ம் நாள்
**இ.ம.எண். 5/2024**
**இல்**
**இ.ம.எண். 184/2022**
**இல்**
**அசல் வழக்கு எண்.69/2022**

மயிலாடுதுறை மாவட்டம், தரங்கம்பாடி தாலுக்கா, மாமாகுடி வட்டம், அப்புராஜபுரம்புத்தூர், கதவிலக்கம் 3/154 வீட்டில் வசித்து வரும் 59 வயதுள்ள வீராசாமி.

...மனுதாரர்/ பிரதிவாதி

//எதிர்//

1. மயிலாடுதுறை மாவட்டம், தரங்கம்பாடி தாலுக்கா, ஆக்கூர், நேரு வீதியில் வசித்து வரும் 82 வயதுள்ள கோவிந்தராஜன்.
2. மேற்படி முகவரியில் வசித்துவரும் கோவிந்தராஜன் மகளும், முனுசாமி மனைவியுமான 52 வயதுள்ள உஷாராணி.

..எதிர்மனுதாரர்கள் / வாதிகள்

மனுதாரரால் இம்மனுவானது ஆவணங்களை தனது எதிர்வழக்குரையுடன் தாக்கல் செய்ய முடியாத நிலைபாட்டினை மன்னித்து தற்பொழுது இவ்ஆவணங்களை ஏற்று தனது தரப்பில் குறியீடு செய்வதற்கு அனுமதி வழங்க வேண்டி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இம்மனு நீதிமன்ற கட்டணமாக ரூ.20 செலுத்தப்பட்டுள்ளது.

மனு 20.06.2024 ம் தேதியில் தாக்கல் செய்யப்பட்டு 20.06.2024 அன்று கோப்புக்கு எடுக்கப்பட்டது.

இம்மனுவானது இந்நீதிமன்றத்தில் என்முன்பாக 10.07.2025 அன்று இறுதியாக விசாரணைக்கு எடுக்கப்பட்டு மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.S.R. சரவணகுமார், அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.K. சங்கரன், அவர்கள் ஆஜராகியும் வழக்கு ஆவணங்களை பரிசீலித்தபின் இன்று இந்நீதிமன்றம் கீழ்கண்டவாறு வழங்கும்.

**உத்தரவாணை**

இந்த மனுவை அனுமதித்து உத்தரவிடப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.

என் கையெழுத்தும் இந்நீதிமன்ற முத்திரையும் இடப்பட்டு, 2025ம் ஆண்டு ஜூலை மாதம் 10 ஆம் நாள் என்னால் வழங்கப்பட்டது.

ஒப்பம் (P. கனிமொழி)
மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
தரங்கம்பாடி